வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் - I<br>Tamil - I | Three Hours<br>Gr. 13 (2020) | 72 | T | I |

மேலதிக வாசிப்பு 10 நிமிடம்

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கம்,எல்லாமாக ஐந்து வனாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ)
பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருவென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாசு ஆங்கே

(i) தனது அழகுநலன் தொடர்பில் தலைவியிடத்தில் ஏற்படும் கழிவிரக்க உணர்வு எவ்விதம் வெளிப்படுத்துப்பட்டுள்ள தென்பதைத் துலக்குக.

(ii) தாழை வெண்பூக் குருகென மலரும்" எனும் அடிகளில் காணப்படும் இலக்கியச் சிறப்பினை விளக்குக.

(iii) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
வேய், விறல், திரை,அல்கலும் *(12 புள்ளிகள்)*

agaram.lk

ஆ) அல்லையாண் டமைந்த மேனியழகனு மவருந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்கு
லெல்லைகாண் பளவு நின்றானிமைப்பில னயன மென்றான்

(i) இச் செய்யுளில் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ii) இச் செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக் காட்டி விளக்குக.

(iii) இராமன் மீதான இலக்குமணனின் பாசம் எவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதென்பதைத் தெளிவுபடுத்துக. *(12புள்ளிகள்)*

(12 + 12 = 24 புள்ளிகள்)

02) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ.
ஏதோ அவதியிலே ஏகுகிறீர்
ஏனப்பா
நீர் தாம் உலகு நிலைமாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி என் தாழ்மை வணக்கங்கள்

ஆள் சுருளும்
வெய்யிலிலே
நீர்போகும் வீதி நடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்
கை இல்லான்
தூங்குகிறவன் போலக் கிடக்கின்றான்
துன்புறுத்தி
வீங்கும் பசியால் விழுந்தானோ

ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறைஉயிரோ
செத்த உடலோ - தெளிவில்லை
சற்றெனினும்
நில்லாது நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசி விடுதல் விரும்பினீர்

வேண்டாம் ஓய்
கூசும் அவமதிக்கும் கொள்கையேன்?

ஆசைமிக
ஆதலினால்,காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்
அன்னோன் கருந்தூக்கம்
பாதியிலே
கெட்டுவிடக் கூடும்
கெடுக்காதீர், பாவம்,இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்

கிட்டப் போய்
மெல்லக் குனிந்து இடுக.
இல்லை யெனில் உம்பாட்டில்
செல்க
இதுவே சிறப்பு.

(i) வீதியில் முடங்கிடக்கிடக்கும் பிச்சைக்காரனின் அவலநிலையைக் கவிஞர் எவ்விதம் வெளியிடுத்தியுள்ளார்?

(ii) பிச்சைக் காரன் தொடர்பில் கவிஞரின் மனிதாபிமான உணர்வு புலப்படுத்தப்பட்டிருக்கு மாற்றை விளக்குக.

(iii) காசினை வீசியெறிந்து செல்வோரின் செயல் "மனிதாபிமானமற்ற செய்கை" என்பதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக

(iv) "நீர் தாம் உலகு நிலைமாறிப் பாதாளத் தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ"? இவ்வரிகளில் நீர் காணும் கவிச்சிறப்பை விளக்குக. (16 புள்ளிகள்)

**அல்லது**

ஆ. இலக்கியமென்பது ஒருகலை. அதன் கருவியான மொழியைப் பற்றிய நுட்பமான ஆராய்ச்சி நம்மிடமுள்ளது. ஆனால் மொழியின் பண்பைப் பற்றிய ஆராய்ச்சியை நாம் செய்ய வேண்டும் அதை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய விமர்சனம் தோன்றும் இதைத் தத்துவரீதியான இலக்கிய விமர்சனம் என்று சொல்லாம். ஆனால் இலக்கியமென்பது வளர்ந்து வரும் போது அதற்கு முன்னிருந்த பழைய இலக்கியத்தோடு தொடர்பில்லாமல் வளருவதில்லை. கம்பன் விருத்தப்பாவைக் கையாண்டானென்றால் அதற்குச் சீவகசிந்தாமணி ஆசிரியன் வழிகாட்டியாக இருந்தானென்பதை மறக்கலாகாது. இந்த வகையிலே நம் நாட்டின் இலக்கியத்தைத் தொடர்ந்து

agaram.lk

வளர்ந்து வந்த ஒரு சீவனாகக் கருதி ஒரு காலத்து இலக்கியத்துக்கும் இன்னொரு காலத்து இலக்கியத்துக்கு முள்ள தொடர்பையும், எப்படி அந்தக் காலத்தின் புதிய வகைகள், புதியமுறைகள் தோன்றின என்பதைப் பற்றி மாராய்வது இலக்கிய விமர்சனத்திலொருபகுதி, இதைச் சரித்திர ரீதியான இலக்கிய விமர்சன மென்று கருதலாம். இலக்கியம் ஆகாயத்தில் முளைப்பதன்று ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனுடைய அனுபவமே இலக்கியமாகிறது. ஆகவே அவன் எந்தச் சமுதாயத்தில் வாழ்ந்தான்? அவனுக்கும் மற்றவர்களுக்குமிருந்த உறவென்ன? அவனுடைய வாழ்க்கைச் சரிதம் அவனுடைய இயல்பைப்பற்றி என்ன தெரிவிக்கிறது? என்பதெல்லாம் ஆராய்ந்து அவனுடைய இலக்கியத்தின் தன்மையை உணர இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்வதும் இலக்கிய விமர்சனத்தில் ஒருமுறை இதை வாழ்க்கைச் சரித்திர ரீதியிலமைந்த இலக்கிய விமர்சன மென்று கொள்ளலாம். இவை தவிர ஒரு புலவனுக்கும் இன்னொரு புலவனுக்கும் இலக்கியப் பண்பைப் பொறுத்த மட்டில் என்ன என்ன ஒற்றுமை. என்ன என்ன வேறுபாடுள்ளது. இளங்கோவடிகள் குரலுக்கும் கம்பன் குரலுக்குமுள்ள வேற்றுமை யென்ன, தனிப்புலவர்களுடைய பண்பை ஆராய்வதும் இலக்கிய விமர்சனத்தின் வேலை. இதை ஒப்புமை ரீதியான இலக்கிய விமரிசன மென்று சொல்லலாம். இவ் விமர்சன வகைகள் ஒவ்வொன்றுற்கும் தனிமுறைகள் உண்டு அடிப்படையான விதிகளுமுண்டு.

i) இலக்கிய விமர்சனத்திற்கும் மொழிகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்து விளக்குக.

ii) ஆசிரியர் சுட்டிக்காட்டும் இலக்கிய விமர்சன வகைகள் எவை?

iii. இலக்கியம் பற்றிய ஆசிரியரது கருத்தியலை விளக்குக.

iv. ஆசிரியரின் உரைநடை பற்றிக் கருத்துரை வழங்குக. (16 புள்ளிகள்)

## பகுதி II

3) "குற்றங் கடிதல்" எனும் அதிகாரத்தில் திருவள்ளுவரால்

(அ) அறுவகையான குற்றங்கள்

(ஆ) குற்றங்கடிதல் வழிகள் பற்றி பொதுவகையாகக் கூறல்

(இ) குற்றங் கடிதல் வழிகள் பற்றிச் சிறப்பு வகையாகக் கூறல் என்பன தொடர்பாக விளக்கப்பட்டிருக்குமாற்றை எடுத்துக் காட்டுவதுடன்

(ஈ) உவமையணியைக் கையாளும் திறனையும் விளக்குக. (20 புள்ளிகள்)

4. பரதன் தனது தாயார் மூவரையும் குகனுக்கு அறிமுகப்படுத்தும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு

(அ) கோசலை, சுமித்திரையின் பெருமைகள்

(ஆ) கைகேகியின் சிறுமை

(இ) பரதனது கழிவிரக்கம்

(ஈ) குகனது செயற்பாடுகளும் சிறப்புகளும் கம்பரால் விபரிக்கப்பட்டிருக்கு மாற்றை விளக்குக

(20 புள்ளிகள்)

5. எஸ். பொன்னுத்துரையின் 'தேர்' எனும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்கு.

(அ) புதுவருடப்பிறப்பன்று பண்பாட்டு மரபுகளைக் கடைப்பிடித்தல்

(ஆ) குமாரசாமியின் திருமணத்தால் எதிர் கொண்ட நெருக்கீடுகள்

(இ) குமாரசாமி மீதான ஆறுமுகத்தாரின் பாசமும் பெருமிதமும்

(ஈ) ஆசிரியாது மொழிநடை (20 புள்ளிகள்)



agaram.lk

6. பேராசிரியார் க கைலாசபதியின் மானுடம் தழுவிய கவிஞர்கள்" எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இலக்கியம் பற்றிய வரைவிலக்கணம் "கவிதையின் உயிர்நாடி அகியவற்றில் தாக்கம் செலுத்தும் ககாரணிகள்

(ஆ) பெருங்கவிஞரிடத்தில் இருக்க வேண்டிய பண்புகள்

(இ) பாரதியை மகாகவியாகக் காட்ட முனையும் திறன்

(ஈ) பாரதிக்கு முன்னர் வாழ்ந்த மகாகவிகளின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் பாங்கு.

(20 புள்ளிகள்)

7. வீரமாமுனவரின் தேம்பாவணி - காட்சிப் படலத்தில் இடம் பெறும் பின்வரும் பாத்திரங்களின் சிறப்புகளை விளக்குக.

(அ) இயேசுகிறிஸ்து

(ஆ) மரியாள்

(இ) சூசை

(ஈ) இடையர்

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) மணிமேகலை மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய கதை எனும் பகுதியில் அந்திமாலை பற்றிய சித்திரிப்பு

(ஆ) "அமலனாதிபிரான்" எனும் பதிகத்தினூடாக வெளியாகும் திருப்பாணாழ்வாரின் பக்திநிலை

(இ) பாரதிதாசனின் 'உதயசூரியன்' எனும் கவிதையில் வெளிப்படுத்தப்படும் சூரியோதய விளைவுகள்

(ஈ) 'எல்லாம் உமதே' எனும் கவிதையினூடாகக் கவிஞர் வெளிப்படுத்த முற்பட்ட விடயங்கள்

(உ) முருகையனின் இருதுயரங்கள் எனும் நாடகத்தில் இருதுயரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் முறை (20 புள்ளிகள்)

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**

**In Collaboration with Provincial Department of Education Northern Province**

**6th Term Examination, - 2020**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் - II<br>Tamil - II | Three Hours<br>Gr. 13 (2020) | 72 | T | II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

- பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

1) எல்லாவினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இயகத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1. பின்வருவனவற்றுள் மேல்முன் உயிர்
(1) அ,ஆ (2) ஒ,ஓ (3) எ,ஏ (4) இ, ஈ (5) உ, ஊ ( )

1.2. பின்வருவனவற்றுள் கடை அண்ண மூக்கொலி
(1) ங் (2) ஞ் (3) ண் (4) ன் (5) ம் ( )

1.3. பின்வருவனவற்றுள் உடன்நிலை மெய்மயக்கமாக மட்டும் அமையக்கூடியவை
(1) க், ம் (2) த், ப் (3) ல், வ் (4) ற், ன் (5) ச், வ் ( )

1.4. பின்வருவனவற்றுள் கூட்டுப் பகுதியைக் கொண்டமைந்த சொல்
(1) பூனையை (2) கைவிடடான் (3) போனேன்
(4) மாடுகள் (5) தருவித்தேன் ( )

1.5. பின்வருவனவற்றுள் ஒன்றுக்குமேற்பட்ட விகுதிகளைக் கொண்டமைந்த சொல்
(1) மேல்வாய் (2) மாடுகளையா (3) அழுதிருந்தான்
(4) மயிற்கூட்டங்கள் (5) சுடுகாடு ( )

1.6. பின்வருவனவற்றுள் புணர்ச்சியின் போது உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
(1) கடற்றொழில் (2) இருக்கைகள் (3) தந்தையோடு
(4) கண்ணீர் (5) விளாம்பழம் ( )

1.7. பின்வருவனவற்றுள் வேற்றுமைப் புணர்ச்சியின் போது திரிபடையும் பெயர்
(1) பலாமரம் (2) நாங்கள் (3) கற்கள்
(4) கதவு (5) வாழைக்குலை ( )

1.8. பின்வருவனவற்றுள் கூட்டுவினையாக்கம் இடம்பெற்றுள்ள வாக்கியம்
(1) நாங்கள் அவர்களின் வீட்டுக்குச் சென்றோம்
(2) பூக்கள் அதிகமாய் மலர்ந்து மணம் வீசின
(3) அர்ச்சுனன் காண்டீபத்தைக் கையில் ஏந்தினான்
(4) சிங்கம் வனத்தின் அரசன்
(5) நீங்கள் எல்லோரும் வேலையைச் செய்து முடியுங்கள் ( )

1.9. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்
(1) நுகர்ச்சி (2) வானொலி (3) பல்கலைக்கழகம்
(4) திரைப்படம் (5) நுணுக்குக்காட்டி ( )

1.10. பின்வருவனவற்றுள் மலர்விழி என்பது
(1) உவமைத்தொகை, வினைத்தொகை
(2) வேற்றுமைத் தொகை, அன்மொழித்தொகை
(3) உவமைத்தொகை, பண்புத்தொகை
(4) வினைத்தொகை, பண்புத்தொகை
(5) உம்மைத்தொகை, உவமைத்தொகை ( )

agaram.lk

1.11. பின்வருவனவற்றுள் குறிப்புவினை முற்றுடன் நிறைவடையும் வாக்கியம்
(1) அவன் உமக்கு நல்லன்
(2) நல்லன் எமது வீட்டுக்கு வந்தான்
(3) நல்லோர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு
(4) காட்சியும் கானமும் கருத்தில் நிறையும்
(5) வாழநினைத்தால் வாழலாம் ( )

1.12. பின்வருவனவற்றுள் 'இரு' துணை வினையாக அமையாத வாக்கியம்
(1) நான் அவர்கள் வீட்டிற்கு போயிருந்தேன்
(2) எல்லோரும் அவர்களுக்காக் காத்திருந்தனர்
(3) அரசன் அரியாசனத்தில் வீற்றிருந்தான்
(4) உங்கள் வருகைக்குப் பார்த்திருப்பேன்
(5) பாறையில் செய்தது என்மனம் என்று சொல்லியிருந்தேன் ( )

1.13. ஓகார இடைச்சொல் திடக்குறிப்பின்மையை உணர்த்தி வரும் வாக்கியம்
(1) கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை
(2) அவனுக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ?
(3) இன்றைக்கு என் கனவு மடியுமோ?
(4) இந்தப்படத்தை எப்போதோ பார்த்திருக்கிறேன்
(5) எல்லோரும் கவலைப்பட அவனோ மகிழ்ச்சியில் திளைத்தான் ( )

1.14. பின்வருவனவற்றுள் பொதுவினையாக வரக்கூடிய வினையடி
(1) சிரி (2) எரி (3) ஓடு (4) வா (5) பார் ( )

1.15. காரணவினை என்பதற்குப் பொருத்தமான கூற்று
(1) கருத்தா வினைக்கு காரணமாக அமைவது
(2) கருத்தா வினையைச் செய்வது
(3) கருத்த வினையின் பயனை அடைவது
(4) கருத்தாவின்றி பிறர் வினையின் பயனை அடைவது
(5) கருத்தாவன்றி பிறர் வினைக்கு காரணமாக அமைவது ( )

1.16. பின்வருவனவற்றுள் 'ஒடு' எனும் வேற்றுமை உருபு ஒன்றுவராத பொருள்
(1) உடன்நிகழ்ச்சிபொருள் (2) அடைமொழிப்பொருள் (3) வரையறைப் பொருள்
(4) கலப்புறுபொருள் (5) நீங்கற்பொருள் ( )

1.17. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயரடையின் அமைவாக அமைவது
(1) பெயர் + வினை (2) பெயர் + தல் / அல் (3) பெயர் + மை / சி
(4) பெயர் + பெயர் (5) பெயர் + ஆன / உள்ள ( )

1.18. பெயரிடைநிலை பெற்று வராத சொல்
(1) அறிஞன் (2) முயற்சி (3) வலைச்சி
(4) கவிஞன் (5) கிளைஞர் ( )

1.19. பின்வருவனவற்றுள் எதிர்மறை நிபந்தனை எச்சத்தொடரைக் கொண்டமைந்துள்ள வாக்கியம்
(1) நீ வேலை செய்யாவிட்டால் பயன்அடையமாட்டாய்
(2) நீ அங்கு சென்றிருந்தால் அவர்களைக் கண்டிருக்கலாம்
(3) மழை பொழிந்ததால் பயிர்கள் செழித்தன
(4) எல்லோரும் அழைத்திருந்தால் வந்திருப்பேன்
(5) மயில் ஆடுமா மழை வருமா ( )

1.20. பின்வருவனவற்றுள் வினைச் சொல்லின் பண்புக்குப் பொருத்தமற்றது
(1) ஏவல் பொருளாய் வரும்
(2) வேற்றுமை உருபு ஏற்கும்
(3) காலம் காட்டுவன
(4) அடைமொழிகளைப் பெற்றுவரும்
(5) விகுதிகளைப் பெற்றுவரும் ( )

(01 x 20 =20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

2) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

மனிதன் பெற்றுள்ள அற்புதமான கருவியே மொழி என்பர் சான்றோர். உள்ளத்தில் உள்ள எண்ணங்களை மற்றவர்களிடம் கூற அல்லது வெளிப்படுத்த இந்தக் கருவியே தகுந்த சாதனமாகக் கருதப்படுகின்றது. "மொழி ஒரு கண்ணாடி போன்றது அஃது உள்ளத்தில் உள்ளதை அப்படியே வெளிக்காட்டிவிடும் தன்மை உடையது" என்றெல்லாம் அறிஞர்களால் பாராட்டப் பெறும் பெருமையும் சிறப்பையும் பெற்று விளங்குவது மொழி என்றால் மிகவும் பொருத்தமானதாகும் மொழி இல்லை எனில் மனித நாகரிகமே வளர்ச்சியடைந்திருக்காது என்பர். உலகத்திய மக்கள் பல்வேறு காலங்களாகப் பல்வேறு மொழிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சில மொழிகள் காலத்தால் வளர்ந்து சிறப்படைந்தன. சில மொழிகள் காலத்தால் அழிந்து போயின.

அதிலும் சிற்சில மொழிகள் காலத்தால் அழியாமல் இன்றளவும் சீரும் சிறப்புடனும் வளர்ந்து இருக்கின்றன என்பதை நினைத்துப் பார்க்கின்ற போது நம்மால் வியக்காமல் இருக்க முடியாது இவ்வகையான சிறப்பையும் பழமையும் பெற்று விளங்குகின்ற மொழிகளுள் தமிழ்மொழியும் ஒரு மொழியாக இன்றளவும் சிறந்து விளங்கி வருகின்றது.

நம்முன்னோர்கள் போற்றியது போலவே நாமும் இம்மொழியைப் போற்றி வளர்த்தால்தான் எதிர்வரும் காலத்தில் மொழியை அழியாமல் பேணிக்காக்க முடியும் இந்தத் தமிழ் மொழியின் சிறப்பை இலக்கியத்தின் வாயிலாகவும் இலக்கணத்தின் வாயிலாகவும் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

இலக்கியம் இலக்கணம் ஆகிய இரண்டும் மொழிக்கு இரு கண்களாகும். ஒரு கண்ணைக் கொண்டு பார்க்க இயலும் என்றாலும் அது முழுமையான பார்வை ஆகாது. எனவே, பார்வையின் முழுமையைப் பெற இரண்டு கண்களுமே இன்றியமையாததாகின்றன. இலக்கணமின்றி மொழியைப் பயன்படுத்துவதும் மொழி ஏதுமின்றி வாழ்வதும் ஒன்றாகத்தான் கருதப்படும். *(13 புள்ளிகள்)*

ஆ) எங்களுடைய அனுபவம் புலவனுடைய அனுபவத்தைப் போல ஆழம் அல்லது தெளிவு உள்ளதாக இருப்பதில்லை. அதனாலும் நாம் அதனைத் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. இத்தகைய நிலையிலிருக்கும் நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப்பெற்று அதனால் இன்பம் அடைய விரும்பின், ஒரு புலவனுடைய உதவியை நாட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆகாயவெளியில் நீந்திக்கொண்டு செல்லும் தண்மதியைக் காணும்போதெல்லாம் எம்முடைய உள்ளத்தில் ஓர் இன்ப உணர்ச்சி உதிக்கின்றது எனினும் அக்காட்சியின் கண் ஒரு புலவனுடைய உள்ளம் அழுந்துவது போல எம்முடைய உள்ளம் அழுந்துவதில்லை. எம்மிலும் பார்க்கப் பன்மடங்கு இன்பத்தைப் புலவன் அடைகின்றான். அது மட்டுமன்று தான் பெற்ற அனுபவத்தைக் கவிதையுருவத்தில் எமக்குத் தருகின்றான். ஆகவே நாம் அவனுடைய உதவியை நாடி, அவன் உதவிய கவிதையைப் படித்து, ஒரு தெளிந்த அனுபவத்தை பெற்று இன்புறுகிறோம். ஆகவே, கற்பனைத்திறனிலும் மொழியாற்றலிலும் புலவன் எம்மிலும் பன்மடங்கு சிறந்து விளங்குவதால் அவனாற் கவிதை புனைய முடிகின்றது. எம்மால் முடிகிறதில்லை. இது தான் எமக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்

ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க வேண்டுமாயின் முதலில் அக்கவிதைக்கு ஏற்ற மனோநிலையினை நாம் எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதுமட்டும் போதாது அதைப் பலமுறை உயர்ந்த கவிதைகளை ஒருமுறை படித்தல் வேண்டும். படித்து அனுபவிக்க முடியாது பன்முறை படித்தால்தான் அது குறிக்கும் பொருள், உணர்ச்சி, அனுபவம் என்பனவற்றை நாம் கிரகித்துக்கொள்ள முடியும். ஒரு முறை படித்தவுடனே அது கூறியன யாவற்றையும் அறிந்து கொள்ள முடியுமாயின், அது சிறந்த கவிதையன்று என்பதை அனுமானித்துக் கொள்ளலாம். கவிதையைப் படிக்கும் போது ஊக்கமும் உள்ளக்கிளர்ச்சியும் எமக்கு வருதல் வேண்டும். அதன் கண் உள்ளத்தைத் தோயவிடுதல் வேண்டும். அந்த நிலையிலேதான் புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். அதில் நாம் அழுந்துவதால் செயற்கரிய இன்பத்தைப் பெறுகிறோம். அமரவாழ்வை அடைகின்றோம். இதுதான் நாம் கவிதையாற் பெறும் பயன் வேறில்லை.

(i) புலவனால் எப்படிக் கவிதை புனைய முடிகின்றது?

(ii) நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் இன்பம் அடைய புலவனுடைய உதவியை நாட வேண்டும் என்பதை இக்கட்டுரையாசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?

(iii) ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க என்ன செய்ய வேண்டும்?

(iv) கவிதையாற் பெறும் பயன் யாது?

(v) எமது அனுபத்திற்கும் புலவனது அனுபவத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது?

(vi) உயர்ந்த கவிதையைப் பன்முறை படிப்பதன் நோக்கம் யாது?

*(12 புள்ளிகள்)*

agaram.lk

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) காலந்தோறும் தமிழ்
(ஆ) கொரோண வைரஸ் நோய்த்தொற்றும் உளவியல் தாக்கமும்
(இ) சிறுவர் துஷ்பிரயோகம்
(ஈ) தமிழ் இலக்கியங்களில் பெண்கள்
(உ) செய்யும் தொழிலே தெய்வம்

*(25 புள்ளிகள்)*

## பகுதி II

4) (அ) சங்க காலத்தெழுந்த அகத்திணை நூல்களைத் தருக.
(ஆ) அகத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவனவற்றைத் தெளிவுபடுத்துக.
(இ) சங்க காலப் புலவன் இயற்கைக்கு முதன்மையாளித்துள்ளமையை சங்கப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

*(15 புள்ளிகள்)*

5) (அ) சோழர் காலத்தெழுந்த காவியங்களை வகைப்படுத்துக.
(ஆ) சோழர் காலக் காவியமரபு பிற்கால இலக்கியங்களில் பிரதிபலிக்குமாற்றைச் சுருக்கமாக விளக்குக.
(இ) நம்பியாண்டார் நம்பியின் இலக்கிய முயற்சிகளை மதிப்பிடுக.

*(15 புள்ளிகள்)*

6) ஈழத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எழுந்த நூல்களை மேல்வரும் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக.

(அ) உள்ளூர் பிரபுத்துவ இலக்கியங்கள்
(ஆ) அந்தாதி இலக்கியங்கள்
(இ) தூது இலக்கியங்கள்

*(15 புள்ளிகள்)*

7) பின்வருவோரில் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

அ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
ஆ) சி.வை. தாமோதரம்பிள்ளை
இ) முகம்மது காசிம் சித்திலெப்பை
ஈ) மஹாகவி

*(15 புள்ளிகள்)*

8) (அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
யாழ் மாவட்ட இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர் சங்கத்தின் தலைவர் திருவாளர் சுந்தரமூர்த்திக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
நேற்றிரவு கொழும்பு புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட யாழ்தேவி இன்னும் சற்று நேரத்தில் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(iii) பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளை இனங்கண்டு திருத்தி எழுதுக.
- மக்கள் திருடனைப்பிடித்துக் காவல்துறையினரிடம் ஒப்புவித்தனர்
- பல அறிஞர்கள் சபையில் வாதிட்டனர்

iv) 'இது தான் நாம் கவிதையாற் பெறும் பயன்' இதில் இடம்பெறும் இடைச் சொற்கள் யாவை? அவை என்ன பொருள்களைத் தருகின்றன.

v) மாடு + கன்று இச்சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.

*(10 புள்ளிகள்)*

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
(i) வினையாலணையும் பெயர்
(ii) கருவிவேற்றுமை
(iii) பெயரடை *(05 புள்ளிகள்)*

(10 + 05 = 15 புள்ளிகள்)

agaram.lk